சென்னைக்கு 5 மாதம் நீர் இருப்பு!

கிருஷ்ணா நீர் வரத்து 10 நாளில் தொடங்கும்!

சென்னை, மே 5-

கிருஷ்ணா நதியில் இருந்து நீர் விநியோகம் மே மாத இடையில் மீண்டும் தொடங்கும். தற்போது சென்னை நகருக்கான நீர் இருப்பு சீராக உள்ளது. மழை பெய்யாவிட்டாலும் சென்னை நகரின் தினசரி விநியோகத்துக்கான சுமார் 1,246 மில்லியன் லிட்டரை குறைந்த பட்சம் 5 மாதங்களுக்கு தொடர முடியும். அந்த அளவுக்கு இருப்பு உள்ளது என்று சென்னைக் குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது. கோடை வெப்பம் அதிகரித்து வரும் நிலையில் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் நீர்த் தேக்கங்களில் நீர் இருப்பு சற்று குறைந்துள்ளது. இதனிடையே கிருஷ்ணா நதியின் நீர் வரத்தை முன்னிட்டு நீர் நிலைகளை இணைக்கும் கால்வாய்களில் மேம்பாட்டுப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ஆந்திராவில் இருந்து மே மாதம் இரண்டாம் வாரத்தில், அதாவது இன்னும் ஏறக்குறைய 10 நாட்களில் நீர் விநியோகம் மீண்டும் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு சென்னை நகரின் நீர் இருப்பு நிலை சீராக உள்ளதாகவும், மழை பெய்யாவிட்டால் குறைந்த பட்சம் 5 மாதங்களுக்கு தினசரி நீர் விநியோகம் தொடரும் என்றும் சென்னைக் குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது. சமீபத்திய புள்ளி விவரத்தின்படி செம்பரம்பாக்கம் மற்றும் செங்குன்றம் உள்ளிட்ட 5 முக்கிய நீர்த் தேக்கங்களின் மொத்த நீர் இருப்பு 7,681 மில்லியன் கன அடியாக இருந்தது. இந்த அளவு அந்த நீர்த் தேக்கங்களின் மொத்த கொள்ளளவில் சுமார் 65.3% ஆகும். இது கடந்த ஆண்டின் மே தொடக்கத்தின் இதே நாளுடன் ஒப்பிடும்போது 62 மில்லியன் கன அடி. இருப்பினும் வீராணம் ஏரி தொடர்ந்து நீர் விநியோகத்தை நிறைவு செய்து வருகிறது. நீர் சேமிப்பு மட்டங்களை சம நிலைப்படுத்தவும், சென்னைக்கு குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யவும் கிருஷ்ணா நீர் வழங்கல் அவசியமாக இருந்தது.

இதற்கிடையே, ஆந்திராவின் எல்லையில் உள்ள கண்டலேறு பூண்டி கால்வாயில் பராமரிப்பு பணியை மேற்கொள்ள ஆந்திர மாநில அதிகாரிகள் கடந்த மார்ச் மாதம் கண்டலேறு நீர்த் தேக்கத்தில் இருந்து பூண்டிக்கு வரும் நீரை நிறுத்தி வைத்திருந்தனர். பராமரிப்பு பணிகள் நிறைவடைய உள்ள நிலையில், ஆந்திர மாநிலத்தின் தேவைகளை நீர்த் தேவையை பூர்த்தி செய்த பிறகே கிருஷ்ணா நீர் மே மாத இரண்டாம் வாரத்தில் சென்னை எல்லைக்குள் வரும் வாய்ப்புள்ளது. சென்னைக்கு குடிநீர் வழங்க நீர் சேமிப்பை அதிகரிக்க, இந்த கால கட்டத்தில் சென்னை நகருக்கு சுமார் குறைந்தபட்சம் 3 ஆயிரம் மில்லியன் கன அடி கிருஷ்ணாநீர் வந்தடையும் என்று எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடும் சிரமத்திலும் நன்மைகள் இருக்கு!

வயல் வெளிகளுக்கு கர்ப்ப ஓட்டம் உருவாக்கும் அக்னிநட்சத்திர காலம்!

புவியியல் நிபுணர்கள் தகவல்!

சென்னை, மே 5-

கோடைகாலம் என்றாலே கொளுத்தும் வெயிலின் உக்கிரமே ஒவ்வொருவர் மனதிலும் வந்து போகும். அதிலும் கோடையின் உச்சம் என்று சொல்லப்படும் அக்னி நட்சத்திர காலம் என்றால், கூடவே ஒரு பீதியும் தொற்றிக் கொள்கிறது. இந்த காலத்தில் சுட்டெரிக்கும் வெயிலை அக்னி நட்சத்திர வெயில், சித்திரை வெயில், கத்திரி வெயில் என்று பல்வேறு பெயர்களில் நாம் அழைத்து வருகிறோம்.

நாம் வாழும் பூமியானது 23.5 டிகிரி சாய்வான நிலையில் சூரியனை சுற்றி வருகிறது. இதுவே உலகில் கோடைகாலம் மற்றும் குளிர்காலம் நிகழ்வதற்கு காரணமாக உள்ளது. சூரியனின் கதிர்கள் எங்கெல்லாம் செங்குத்தாக விழுகிறதோ அந்த இடங்களில் எல்லாம் கோடைகாலம் உருவாகிறது. ஆண்டுதோறும் மார்ச் 23ம் தேதி சூரியன், பூமியின் நடுக்கோட்டிற்கு நேர் மேலிருந்து மெல்ல, மெல்ல வடக்கு நோக்கி நகர ஆரம்பிக்கும். இப்படி வடக்கு நோக்கி நகரும் சூரியன், கடக ரேகைக்கு நேர் மேலே இருக்கும். அதன் பிறகு சூரியன் தெற்கு நோக்கி, அதாவது பூமியின் நடுக்கோட்டை நோக்கி நகர ஆரம்பிக்கும். அப்போது பூமியின் நடுக்கோட்டிற்கு வடக்கே உள்ள நாடுகளில் கோடைகாலமாக இருக்கும்.

அதே நேரத்தில், நடுக்கோட்டிற்கு தெற்கே உள்ள நாடுகளில் குளிர்காலமாக இருக்கும். அங்கு சூரியனின் கதிர்கள் சாய்வாக விழுவதே குளிர்ச்சிக்கு காரணம். இதில் சூரியக்கதிர்கள் பூமியை அதிகளவில் நெருங்கி வரும் கோடைகாலத்தின் இறுதி நாட்களே அக்னி நட்சத்திர காலம் என்று அழைக்கப்படுகிறது. இப்படி அக்னி நட்சத்திர காலம் நம்மை அதிர வைத்தாலும், அதில் சில நன்மைகளும் இருக்கிறது என்கின்றனர் புவியியல் ஆய்வாளர்கள்.

இது குறித்து வானிலை சார்ந்த புவியியல் ஆய்வாளர்கள் கூறியதாவது: பொதுவாக சித்திரை, வைகாசி மாதங்களில், பூமியானது சூரியனுக்கு அருகே செல்வதால் வெப்பம் கடுமையாக இருக்கிறது. இந்த வகையில் நடப்பாண்டு சித்திரை 21ம் தேதி முதல் வைகாசி 14ம் தேதி வரை (மே 4ம் தேதி முதல் 28ம் தேதி வரை) அக்னி நட்சத்திர காலம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட வயல்வெளிகளில் வெப்பத்தின் காரணமாக வெடிப்புகள் ஏற்படும். அதன் வழியாக பூமியின் வெப்பம் வெளியேறும். அந்த பிளவுகளில் காய்ந்த இலைகளும், சருகுகளும் நுழைந்து விடும். அக்னி நட்சத்திரம் முடிந்து வைகாசி மாதத்தின் பிற்பகுதியில் வீசும் காற்றால் பூமி குளிர்ந்து விடும். அதனையொட்டி, மழை பெய்தால் நிலத்தின் வெடிப்புகள் மூடப்பட்டு விடும். இதனை 'கர்ப்ப ஓட்டம்' என்று புவி மேலாண்மை வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த வகையில், இயற்கையாகவே வயலுக்கு நல்ல உரம் கிடைக்கிறது. அடுத்த வேளாண்மைக்கும், வயல் வளம் பெற்று விடுகிறது.

இதன்படி கோடையின் கொடும் தாக்கமான அக்னி நட்சத்திர காலம், பூமிக்கு ஒரு நன்மையை கொடுக்கிறது என்றால் அது மிகையல்ல. எனவே, பீதிக்கு இடம் கொடுக்காமல் மருத்துவ நிபுணர்கள் வழங்கியுள்ள அறிவுரைகளை பின்பற்றி, மக்கள் அக்னி நட்சத்திர காலத்தை எதிர்கொள்ள வேண்டும்.

இவ்வாறு புவியியல் ஆர்வலர்கள் கூறினர்.

மீன்பிடி தடைக்காலம் எதிரொலி:

மீன்களின் விலை தொடர்ந்து அதிகரிப்பு!

சென்னை, மே.5-

மீன்பிடி தடைக்காலம் அமலில் இருப்பதால், மீன்கள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. ஒருகிலோ வஞ்சிரம் மீன் ரூ.1,600 வரை விற்பனை செய்யப்பட்டது.

மீன் விலை கிடுகிடு உயர்வு வங்கக்கடல் பகுதியில் ஆண்டுதோறும் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்படுகிறது. அந்த வகையில், தமிழகத்தில் கடந்த ஏப்ரல் 15 தேதி தடைக்காலம் அமலுக்கு வந்தது. வருகிற ஜூன் 14ந் தேதி வரையில் 61 நாட்கள் வரை மீன்பிடி தடைக்காலம் அமலில் இருக்கும்.

மீன்பிடி தடைகாலம் அமலில் இருப்பதால் சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்திற்கு வரும் மீன்வரத்து கணிசமாக குறைந்துள்ளது. தற்போது, ரப்பர் படகுகள் மூலம் ஆழ்கடலுக்குச் செல்லாமல் கடலோரத்தில் மட்டும் மீன் பிடித்துச் வருகின்றனர். இதனால் தடைகாலத்திற்கு முன்பு 180 முதல் 200 டன் வரை கிடைத்து வந்த மீன்கள் தற்போது 20 முதல் 30 டன் அளவில் மட்டுமே கிடைக்கிறது. அதுமட்டுமின்றி, கேரளா, கர்நாடகா, கோவா, மும்பை போன்ற வெளி மாநிலங்களில் இருந்து லாரி மற்றும் ரெயில்கள் மூலம் பதப்படுத்தப்பட்ட மீன்கள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் மீன் விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது. எண்ணிக்கை குறைவு அந்த வகையில், வார விடுமுறை தினமான நேற்று முன்தினம் காசிமேட்டில் வழக்கமாக வார விடுமுறை நாட்களில் வருவோரை காட்டிலும் நேற்று முன்தினம் வந்தவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

காசிமேடு துறைமுகத்தில் நேற்று முன்தினம் விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலைப் பட்டியல் விவரம் வருமாறு:-

மீன்கள் விலை (1கிலோ) கருப்பு வாவல் 1400 பாறை 1100 பால் சுறா 900 சங்கரா 400 இறால் 550 நண்டு 600 மத்தி 160 தடைகாலத்திற்கு முன்பு ரூ.850க்கு விற்பனை செய்யப்பட்ட வஞ்சிரம் தற்போது ரூ.1,600 வரை விற்கப்பட்டது. ரூ.450 முதல் ரூ.600 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த சீலா மீன் நேற்று முன்தினம் ரூ.850 முதல் ரூ.950 வரை விற்பனை செய்யப்பட்டது.

கன்னியாகுமரியில்

சூரிய உதயம் தெரியாததால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்!

கன்னியாகுமரி, மே.5 -

கோடை விடுமுறையையொட்டி கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது. காலையில் மேகமூட்டம் காரணமாக சூரிய உதயம் தெரியாததால் ஏமாற்றம் அடைந்தனர்.

சுற்றுலா பயணிகள் குவிந்தனர் புகழ்பெற்ற சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தின மும் ஆயிரக்கணக்கான உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். தற்போது கோடை விடுமுறைவிடப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் வார விடுமுறை என்பதால் ஏராள மான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வந்தனர். அதிகாலையில் சூரிய உதய காட்சியை காண கடற்கரையில் திரண்டனர். ஆனால் மேகமூட்டம் காரணமாக சூரியன் உதயமான காட்சி தெளிவாக தெரியவில்லை. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

பின்னர் கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட படகுதுறையில் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். காலை 8 மணிக்கு படகு சேவை தொடங்கியதும் உற்சாகத்துடன் படகில் சென்று. விவேகானந்தர் நினைவு மண்டபம் சென்றனர். அங்கிருந்து கண்ணாடிநடை பாலம் வழி யாக சென்று திருவள்ளுவர் சிலையை கண்டு களித்தனர்.

கண்ணாடி பாலத்தில் நடந்து சென்று அதன் பிரமிப்பையும், கடலின் அழகையும் ரசித் தது மிகவும் அற்புதமாக இருந்ததாக சுற்றுலா பயணிகள் தெரிவித்தனர். தற்போது வெயிலின் தாக் கம் அதிகமாக உள்ளதால் கன்னியாகுமரி கடற்கரையில் இதமான காற்றை அனுப விக்க மாலை நேரங்களில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக கூடியதை காண முடிந்தது. போலீஸ் பாதுகாப்பு மேலும் காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணி மண்டபம், அரசு அருங்காட்சியகம், அரசு பழத்தோட்டம், சுற்றுச்சூழல் பூங்கா உள்பட அனைத்து சுற்றுலா தலங்களிலும் நேற்று முன்தினம் காலையில் இருந்தே சுற்றுலா பயணிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இதனால் கன்னியாகுமரி பகுதியில்அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கடற்கரையில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக காணப்பட்டதால் போலீசாரும், கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும், சுற்றுலா பாதுகாவலர்களும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

மகாராஷ்டிராவில் அடுத்தடுத்து சிக்கும் போதைப்பொருட்கள்!

ரூ.7 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்!

மும்பை, மே 5-

பா.ஜ.க., ஆளும் மகாராஷ்டிரா மாநிலத்தில் இரு தினங்களுக்கு முன்பு ஆயிரத்து 745 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டநிலையில், மேலும் 7 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

பா.ஜ.க. ஆளும் மகாராஷ்டிர மாநிலத்தில் போதைப்பொருட்களின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வெளி நாடுகளில் இருந்து கடத்தி வரப்படும் உயரக போதைப் பொருட்கள் மாநிலம் முழுவதும் கொண்டு செல்லப்படுகிறது. இந்த சூழலில் மும்பையில் இரு தினங்களுக்கு முன்பு 349 கிலோ எடையுள்ள உயர்தர போதைப் பொருட்களை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் மதிப்பு ஆயிரத்து 745 கோடி ஆகும்.

சிறிய அளவிலான போதைப்பொருள் கடத்தல் தொடர்பான விசாரணையின்போது மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் கும்பல் சிக்கியது. போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக தேசிய போதைப்பொருள் தடுப்பு முகமை விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், மும்பையில் இன்று மேலும் 7 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கென்ய நாட்டின் தலைநகர் நைரோபியில் இருந்து வந்த விமானம் ஒன்று மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கியது. இதையடுத்து, அந்த விமானத்தில் வந்திறங்கிய தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரை சேர்ந்த பயணியை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, அவர் உடைமைகளில் மறைத்து வைத்து கடத்தி வந்த ஆயிரத்து 426 கிராம் கொக்கைன் போதைப் பொருளை அதிகாரிகள் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு சுமார் 7 கோடி ரூபாய் ஆகும். இதையடுத்து அந்த பயணியை அதிகாரிகள் கைது செய்தனர். இதுதொடர்பாக மும்பை விமான நிலைய அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சார்ஜாவில் இருந்து சென்னை வந்த விமானத்தின்

அவசரகால கதவை திறந்து பயணி குதித்து ஓடியதால் பரபரப்பு!

சென்னை, மே 5-

சார்ஜாவில் இருந்து சென்னை வந்த விமானத்தின் அவசரகால கதவை திறந்து பயணி ஒருவர் குதித்து ஓடியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால், அடுத்ததாக லண்டனில் இருந்து வந்த விமானம் சென்னையில் தரையிறங்க முடியாததால், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

சார்ஜாவில் இருந்து ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ் விமானம், 217 பயணிகளுடன் நேற்று முன்தினம் அதிகாலை 3.25 மணிக்கு சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கி, ஓடு பாதையில் இருந்து டாக்ஸி வேயில் வந்து நிற்க தயாரானது.

அப்போது, விமானத்தில் இருந்த புதுக்கோட்டையைச் சேர்ந்த முகமது நிஜாமுதீன் செரீப் (30) என்ற பயணி திடீரென விமானத்தின் அவசரகால கதவை திறந்து, மின்னல் வேகத்தில் அதன் சரக்கு பாதை வழியாக வெளியில் குதித்து ஓடினார். இச்சம்பவம் சென்னை விமான நிலையத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்னை விமான நிலையத்தின் ஓடுபாதை பகுதியில் அவசரகால அபாய அறிவிப்பு எச்சரிக்கை மணி ஒலிக்கப்பட்டது. உடனடியாக, பாதுகாப்பு அதிகாரிகள் விரைந்து வந்து, விமானத்தின் அவசரகால கதவு வழியாக வெளியில் குதித்து ஓடிய பயணியைச் சுற்றி வளைத்து பிடித்தனர்.

இதற்கிடையில், விமானம் அது நிக்க வேண்டிய இடத்துக்கு பதிலாக, டாக்ஸி வேயில் நிறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து, அடுத்ததாக லண்டனில் இருந்து 284 பயணிகளுடன் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் சென்னையில் தரையிறங்குவதற்காக வந்தது.

டாக்ஸி வேயில் ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ் விமானம் நின்று கொண்டு இருந்ததால், அந்த விமானம் சென்னையில் தரையிறங்க முடியாததால், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

உடனடியாக, மத்திய உளவுத்துறை அதிகாரிகள், சென்னை விமான நிலைய உயர் அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

இதற்கிடையே, ஓடும் விமானத்தில் இருந்து கீழே குதித்த பயணியை தனி அறையில் வைத்து பாதுகாப்பு அதிகாரிகள் விசாரித்தனர். விசாரணையில், அந்த பயணி மனநிலை பாதிக்கப்பட்டவர் போல் பேசியதால், அவர் அவர் உண்மையில் மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை வந்த ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் சென்னையில் இருந்து மீண்டும் சார்ஜாவுக்கு அதிகாலை 4 மணிக்கு புறப்பட வேண்டும். ஆனால், இந்த சம்பவம் காரணமாக விமானம் தாமதமாக 7.45 மணிக்கு புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதேபோல், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் ஏர்வேஸ் பயணிகள் விமானம், பெங்களூரில் இருந்து சென்னைக்கு திரும்பியது. சென்னையில் இருந்து அதிகாலை 5.35 மணிக்கு லண்டன் புறப்பட வேண்டிய அந்த விமானம் காலை 9 மணி அளவில் லண்டன் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

விமானத்தின் அவசர கால கதவை திறந்து விமானத்தில் இருந்து குதித்த பயணிக்கு லேசான சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டதால், அவருக்கு சென்னை விமான நிலைய மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. சினிமா காட்சி போல் நடந்த இந்த சம்பவத்தால், இதனால் சென்னை விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

விமான நிலையங்கள்

பயன்பாட்டில் சென்னை முதலிடம்!

சென்னை, மே 5-

தமிழகத்தில் அதிக பயணிகள் பயன்படுத்திய விமான நிலையங்களில் சென்னை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த நிதியாண்டில், தமிழகத்தில் அதிக பயணிகள் பயன்படுத்திய விமான நிலையங்களின் பட்டியலை இந்திய விமான நிலையங்கள் ஆணையம் அறிவித்துள்ளது.

இதன்படி, 2.30 கோடி பயணிகள் பயன்படுத்தியதாக சென்னை விமான நிலையம் முதலிடத்தில் உள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 2.7 சதவிகிதம் அதிகம்.

இரண்டாவது இடத்தில், 32.2 லட்சம் பயணிகளுடன் கோவை விமான நிலையம் உள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 5.2 சதவிகிதம் அதிகம். கோவை விமான நிலையத்தில் கடந்த நிதியாண்டில், 22,462 முறை விமானங்கள் வந்து சென்றுள்ளன.

கோவையில், கடந்த நிதியாண்டில் சர்வதேச பயணத்துக்காக 2.97 லட்சம் பேரும், 31.2 லட்சம் பேர் உள்நாட்டு பயணத்துக்காகவும் விமான நிலையத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

மூன்றாவதாக, 22.2 லட்சம் பயணிகளுடன் திருச்சி விமான நிலையமும், நான்காவதாக 13.8 லட்சம் பயணிகளுடன் மதுரையும், 2.90 லட்சம் பயணிகளுடன் தூத்துக்குடியும், 1.27 லட்சம் பயணிகளுடன் சேலம் விமான நிலையமும் உள்ளன.

சென்னை ரயில்வே கோட்டத்தில் டிக்கெட் இன்றி பயணம்!

12 லட்சம் வழக்குகள் பதிவு!

சென்னை,மே 5-

கடந்த நிதியாண்டில், சென்னை ரயில்வே கோட்டத்துக்கு உட்பட்ட ரயில் நிலையங்கள், ரயில்களில் டிக்கெட் இல்லாமல் பயணம், முறையற்ற பயணம் உள்ளிட்ட பிரிவுகளில் 12.24 லட்சம் வழக்குகள் பதிந்து, ரூ.65.16 கோடி வசூலிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: சென்னை ரயில்வே கோட்டத்தில் கடந்த நிதியாண்டில் (2025-26), ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

டிக்கெட் இல்லாமல் பயணம், முறையற்ற பயணம் மேற்கொண்டது தொடர்பாக,12.24 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ.65.16 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

அறிவுறுத்தல்

பயணிகள் ரயில் நிலைய வளாகத்துக்குள் நுழைவதற்கு முன்னரே முறையான டிக்கெட்களைப் பெற்று, அபராதம் மற்றும் சட்ட நடவடிக்கைகளைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகின்றனர்.

பயணிகள் தங்கள் பயணத்தைத் தொடங்குவதற்கு முன் டிக்கெட்களை சரிபார்த்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அவர்கள் கூறினர்.

எரிபொருள் நெட்வொர்க்கை சிதைக்க

ரஷ்யாவின் 2 கப்பல்களை அழித்தோம்!

உக்ரைன் அதிபர் தகவல்!

கீவ், மே 5 -

ரஷ்யாவின் 2 எண்ணெய் கப்பல்களை உக்ரைன் ராணுவம் தாக்கி அழித்தது என்று அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரி வித்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் சேர உக்ரைன் விரும்பியது. இதற்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தது. இதை ஏற்க மறுத்த உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரி மாதம் போர் தொடங்கியது. கடந்த 4 ஆண்டுகளாக இரு நாடுகளும் ஒன்றின் மீது ஒன்று தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், டெலிகிராம் சமூக வலைதளத்தில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வெளியிட்ட பதிவில் நேற்று கூறியிருப்பதாவது:

ரஷ்யாவின் எரிபொருள் நெட்வொர்க்கை சிதைக்க உக்ரைன் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. அந்த வகையில் ரஷ்யாவின் நிழலாக செயல்பட்டு வந்த 2 எண்ணெய் கப்பல்களை ட்ரோன்கள் மூலம் தாக்கி அழித்தோம்.

அந்தக் கப்பல்கள்தான் ரஷ்ய கச்சா எண்ணெய்யை கொண்டு சென்று வந்தன. இப்போது அந்த கப்பல்கள் இல்லை. அந்த 2 கப்பல்களையும் ரஷ்யாவின் நோவோராசியிக் துறைமுகத்தின் நுழைவு வாயில் பகுதியில் தாக்கி அழிக்கப்பட்டது. தரை, வான், கடல் வழியாக தொலை தூர இலக்கை தாக்கும் உக்ரைனின் ராணுவ நடவடிக்கை தொடரும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

உயிரிழப்பு எதுவும் இல்லை!

முன்னதாக ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட தகவலில், "ரஷ்ய தலைநகர் மாஸ்கோ மற்றும் லெனின்கிரேன் உட்பட 15 பகுதிகளில் தாக்குதல் நடத்த அனுப்பிய உக்ரைனின் 334 ட்ரோன்களை இடைமறித்து அழித்தோம். இதில் உயிரிழப்பு எதுவும் ரஷ்ய தரப்பில் இல்லை" என்று கூறியிருந்தார்.